# DON BOSCO SCHOOL OF EXCELLENCE SENIOR SECONDARY SCHOOL, EGMORE.

**அறிவியல் ஆக்கங்கள் - கட்டுரை** வகுப்பு - 6

- **முன்னுரை :**

“அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்” என்றார் ஔவைப்பாட்டி. அறிவியல் இன்று உலகையே ஆள்கிறது. அறிவியலின் துணை இன்றி மனிதன் இப்புவியில் இனி வாழ இயலாது. அறிவியலின் ஆக்கங்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

- **விண்ணைத்தாண்டி :**

காற்றைக் கிழித்துக் கொண்டு விண்ணில் பறக்கின்றன விமானங்கள். செயற்கைக்கோள்களை ஏந்தியபடி சீறுகின்றன ஏவூர்திகள். நிலவைக் காட்டி குழந்தைகளுக்குச் சோறு ஊட்டிய காலம் மாறி நிலவுக்குச் சென்று சோறூட்டும் காலம் நெருங்கிவிட்டது.

- **உள்ளங்கையில் உலகம் :**

“காசி நகர்ப் புலவர் பெசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்” என்றார் பாரதி.

இன்று உலகின் எந்த ஒரு மூலையில் ஒரு நிகழ்வு நடந்தாலும் வீட்டில் உள்ளங்கையில் அலைபேசி மூலம் நேரலையாக நாம் பார்க்கவும் கேட்கவும் முடிகிறது.

- **மருத்துவமும் பொறியியலும் :**

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள். உயிர்காக்கும் மருந்துகள் அறிவியல் ஆய்வுகளால் நமக்குக் கிடைத்துள்ளன. செயற்கைக் கால்களை வெறும் நானூறு கிராம் எடையில் உருவாக்கினார் நம் அப்துல்கலாம்.

- **முடிவுரை :**

இரவைப் பகலாக்கும் மின்விளக்குகள், தானியங்கிகள் மற்றும் நுண்ணுணர்வுக் கருவிகள் மூலம் தொழிற்சாலை உற்பத்தி என எல்லாம்

அறிவியலின் கொடைகளே. வானில் பிற கோள்களில் வசிக்கவும், கடலடியில் கட்டவும் முயற்சி நடக்கிறது.

---